32495
10 JUL 2009

சுருக்கம்

அயற்பணி– தமிழ்நாடு நகராட்சி பொறியியற் பணியைச் சார்ந்த உதவி செயற்பொறியாளர்களை கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் தோற்றுவிக்கப்பட்ட உதவி செயற் பொறியாளர் பணியிடத்தில் மாறுதல் செய்ய அரசின் அனுமதி– ஆணைகள் வெளியிடல்

= = = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை

அரசாணை (டி) எண். 308 நாள் 07–07–2009

திருவள்ளுவர் ஆண்டு 2049, ஆனி– 23

படிக்க:-

1. அரசாணை (2டி) எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி2) துறை, நாள் 28/6/2007
2. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி கடித எண்.10908/08/ஜேஎன்.2 நாள் 25–3–2009 மற்றும் 4–5–09
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடித எண்.12550/08/ஜேஎன்என். நாள் 9–6–2009

ஆணை:–

கோயம்புத்தூர் மாநகராட்சியில் முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் JNNURM திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட 4 (நான்கு) உதவி செயற் பொறியாளர் பணியிடங்களில் கோயம்புத்தூர் மாநகராட்சி பணியாளர்கள் இருவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது எனவும் மீதமுள்ள இரு உதவி செயற் பொறியாளர் பணியிடங்களை நிரப்ப தகுதி வாய்ந்த பணியாளர் யாரும் கோயம்புத்தூர் மாநகராட்சியில் இல்லாததால் அனுபவம் வாய்ந்த தமிழ்நாடு நகராட்சி பொறியியற் பணியைச் சார்ந்த பணியாளர்களைக் கொண்டு காலியாக உள்ள இரண்டு உதவி செயற்பொறியாளர் பணியிடங்களை அயற்பணி அடிப்படையில் நிரப்புமாறும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் நகராட்சி நிர்வாக இயக்குநரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. எனவே கோயம்புத்தூர் மாநகராட்சியில் JNNURM திட்டப்பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி கீழ்கண்டவாறு அயற்பணி அடிப்படையில் காலியாக உள்ள உதவி செயற் பொறியாளர் பணியிடங்களை நிரப்ப நகராட்சி நிர்வாக

இயக்குநர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்:-

| பெயர் மற்றும் பதவி | தற்போது பணிபுரியும் இடம் | மாறுதல் செய்யப்படும் இடம் மற்றும் பதவி |
|---|---|---|
| திரு எஸ்.வெற்றிவடிவேல், உதவி செயற் பொறியாளர் | மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சேலம் | உதவி செயற் பொறியாளர், JNNURM, கோயம்புத்தூர் மாநகராட்சி |
| திரு எஸ்.கண்ணன், நகராட்சிப் பொறியாளர் நிலை—2 | கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி | உதவி செயற் பொறியாளர், JNNURM, கோயம்புத்தூர் மாநகராட்சி |

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று மேலே பத்தி 2ல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு அயற்பணி அடிப்படையில் பணிமாறுதல்கள் செய்ய அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை—5
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
திரு எஸ்.வெற்றிவடிவேல், உதவி செயற் பொறியாளர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சேலம்
திரு எஸ்.கண்ணன், நகராட்சிப் பொறியாளர் நிலை—2 கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி (நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை—600 108
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்
(அரசு செயலாளரின் தனிச் செயலர்/நப3/ அந—2) துறை, சென்னை—9.

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்